பக்கங்கள் 19 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 13 புதன்கிழமை 26.06.2024 அதிர்வு 331

## ரயில் நிலையத்துக்கு அருகில் பல்கலை மாணவனின் சடலம்

ஜா – எல ரயில் நிலையத்துக்கு அருகிலிருந்து பல்கலைக்கழக மாணவன் ஒருவர் நேற்று இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஜா – எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

02▶



# கொழும்பில் போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மீது கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை!

**கொழும்பு - லோட்டஸ் சுற்றுவட்டத்துக்கு அருகில் இன்று போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்க உறுப்பினர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொண்டனர்.**

**நாடளாவிய ரீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று புதன்கிழமை சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.**



இந்நிலையில், அதிபர்கள், ஆசிரியர்களின் பங்குபற்றுதலுடன் இன்று முற்பகல் 11 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுத்தனர்.

இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தைக் கலைப்பதற்காகப் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அதிபர்கள், ஆசிரியர்கள் பாதிப்படைந்தனர்.

# அதிபர், ஆசிரியர்களின் போராட்டம் நாளையும் தொடரும் என அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

“அதிபர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வை வழங்காது, தமக்குக் கிடைக்க வேண்டியதை கேட்கும் அதிபர்கள், ஆசிரியர்களின் ஜனநாயக ரீதியான இன்றைய போராட்டத்தை நசுக்க, நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசி, அதிபர்கள், ஆசிரியர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல்கள் நடத்திய ரணில் – ராஜபக்ஷ அரசின் அடக்குமுறையைக் கண்டித்து நாளைய தினம் 27 ஆம் திகதி அதிபர்கள், ஆசிரியர்களின் சகயீன விடுமுறைப் போராட்டம் தொடரவுள்ளது.”

– இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் ஆ.தீபன் திலீசன் அறிவித்துள்ளார்.

“அதிபர்கள், ஆசிரியர்கள் மீதான அடக்குமுறைகளைக் கண்டிக்கும் விதமாக இன்று போல் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் நாளைய தினமும் ஆதரவு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




### யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற

# சொகுசு பஸ் கோர விபத்து! சாரதி உட்பட மூவர் மரணம்!!

## நடத்துநர் உட்பட இருவர் படுகாயம் மாங்குளத்தில் நேற்று இரவு சோகம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு பஸ் மாங்குளம் பகுதியில் விபத்துக்குள்ளானதில் பஸ் சாரதி உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை இரவு கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு பஸ், மாங்குளம் பகுதியில் இயந்திரக் கோளாறு காரணமாக பழுதடைந்த நிலையில், யாழ்ப்பாணம் – கண்டி நெடுஞ்சாலையில் நிறுத்தப்பட்டு, சாரதி, நடத்துநர் உள்ளிட்டோர் திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அவ்வேளை வீதியில் வேகமாகப் பயணித்த கனரக வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியில் நின்ற பஸ் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது.

அதன்போது பஸ்ஸில் திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்த சாரதி, நடத்துநர் உள்ளிட்ட ஐவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், வைத்தியசாலையில் சாரதி உள்ளிட்ட மூவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

நடத்துநரும், மற்றைய நபரும் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இந்திய மீனவர்கள் 10 பேருக்கும் விளக்கமறியல்

**(ந.லோகதயாளன்)**

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களைப் பிடிக்கச் சென்ற கடற்படைச் சிப்பாய் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கில் கைதான 10 இந்திய மீனவர்களும் மல்லாகம் நீதிவானின் உத்தரவுக்கமைய எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் – நெடுந்தீவு கடற்பரப்பில் நேற்று அதிகாலை அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களைப் பிடிக்கச் சென்ற கடற்படைச் சிப்பாய் மோதலில் உயிரிழந்தார். இதன்போது 10 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த ஒரு படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. கடற்படையினரால் கைது செய் யப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேரும், மீனவர்கள் வந்த படகும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு கொண்டு வரப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில் சட்ட நடவடிக்கைக்காகக் காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதான இந்திய மீனவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மல்லாகம் நீதிவான் முன்னிலையில் நேற்று மாலை முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறியமை மற்றும் ஆபத்தான விதத்தில் படகையோட்டி உயிரிழப்பை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்திய மீனவர்கள் அத்துமீறி இலங்கைக் கடற்பரப்பில் நுழையும்போது கைது செய்யப்பட்டால் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவதே வழமை என்கின்ற நிலையில், குறித்த சம்பவத்தில் உயிரிழப்பு ஏற்பட்டதால் நேரடியாகப் பொலிஸார் மூலம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்லம, சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜயவர்தன புர பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பு – சிலாபம் ரயில் மார்க்கத்தில் பயணித்த ரயிலொன்றில் மோதி உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜா – எல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# இலங்கைக்குக் கஞ்சா கடத்த இராமேஸ்வரத்தில் பதுங்கியிருந்த இலங்கையர் உட்பட மூவர் கைது!

## கஞ்சா மற்றும் இலங்கை ரூபா நோட்டுகள் பறிமுதல்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்குக் கஞ்சா கடத்துவதற்காக இராமேஸ்வரம் தங்கும் விடுதியில் பதுங்கி இருந்த இலங்கையைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து கஞ்சா மற்றும் இலங்கை ரூபா நோட்டுகளைப் பறிமுதல் செய்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவுப் பொலிஸார் தொடர்ந்து அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் இலங்கைக்கு மிக அருகில் இருப்பதால் தனுஷ்கோடி கடல் வழியாக நாட்டுப் படகுகளில் இலங்கைக்கு கஞ்சா, ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்கள் அதிகளவு கடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இராமேஸ்வரத்தில் தங்கி தனுஷ்கோடி கடல் வழியாகப் போதைப்பொருள் கடத்தல் தொழில் செய்வதற்கு இலங்கை புத்தளம் மாவட்டம், கற்பிட்டி யைச் சேர்ந்த அந்தோணி பிரவீன் (வயது 35) என்பவர் கடந்த மே மாதம் 31ஆம் திகதி விமான மூலம் கொழும்பு விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு ஜுன் முதலாம் திகதி காலை சென்னை வந்து இறங்கி பின்னர் அங்கிருந்து இராமேஸ்வரம் வந்து தனியார் தங்கும் விடுதியில் அறை எடுத்து தங்கினார்.

பின்னர் அவர் பெங்களூர், வேளாங்கண்ணி உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள கஞ்சா வியாபாரிகள் பலரைச் சந்தித்து கஞ்சா கொள்முதல் செய்வதற்காக விசாரித்தார் என்று சொல்லப்படுகின்றது.




பின்னர் இராமேஸ்வரம், புதுரோடு பகுதியைச் சேர்ந்த உமா செல்வம் (வயது 45) என்பவர் மூலம் பேக்கரும்பு பகுதியைச் சேர்ந்த கஞ்சா வியாபாரி தியாகராஜன் (வயது 57) என்பவரைச் சந்தித்து அவரிடம் இருந்து கஞ்சா பொட்டலங்களை வாங்கி தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்குப் படகு மூலம் கஞ்சா கடத்துவதற்கு முயற்சி செய்து வந்துள்ளார்.

மேலும், அந்தோணி பிரவீனுக்கு இலங்கை, மன்னாரைச் சேர்ந்த சுதாகர் என்பவர் இரண்டு தவணையாக கஞ்சா கொள்முதல் செய்ய 2 இலட்சம் பணம் அனுப்பியுள்ளார்.

அந்தப் பணத்தில் அந்தோணி பிரவீன் கஞ்சா தரம் குறித்து தெரிந்து கொள்வதற்காக முதல் கட்டமாக 2 கிலோ கஞ்சா பொட்டலத்தை ரூ. 35 ஆயிரத்துக்குத் தியாகராஜனிடம் வாங்கியுள்ளார்.

இதனிடையே இது குறித்து தகவல் அறிந்த காவல் கண்காணிப்பாளர் தனிப்பிரிவு இராமேஸ்வரம் ஆய்வாளர் நல்லுசாமி மற்றும் காவலர் பால முரளி தலைமையிலான பொலிஸார் அந்தோணி பிரவீனை சுற்றிவளைத்து கைது செய்து அவர் தங்கி இருந்த அறையைச் சோதனை செய்த போது அவரிடம் இருந்து சுமார் ஒன்றரை கிலோ கஞ்சா மற்றும் இலங்கை ரூபா 50 ஆயிரம் உள்ளிட்டவைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

அதைத் தொடர்ந்து அந்தோணி பிரவீனை தனுஷ்கோடி காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று நடத்திய விசாரணையில் தியாகராஜனிடம் கஞ்சா பொட்டலங்களை வாங்கி உமா செல்வம் என்பவர் மூலம் நாட்டுப் படகில் இன்னும் ஓரிரு நாட்களில் சுமார் 400 கிலோ கஞ்சா பொட்டலங்கள் அடங்கிய மூடையை இலங்கைக்கு கடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து தியாகராஜன், உமா செல்வம் இருவரையும் கைது செய்த பொலிஸார், இலங்கையைச் சேர்ந்த அந்தோணி பிரவீன் உட்பட மூவர் மீது வழக்குப் பதிவு செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி மூவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






# மூதூரில் மதுபானசாலை திறப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்த 15 பேர் கைது!

**(ஏ.எச்.ஹஸ்பர், எஸ்.கீதபொன்கலன்)**

திருகோணமலை, மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருதயபுரம் பகுதியில் மதுபானசாலை திறக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த 15 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இதில் 11ஆண்களும், 4 பெண்களும் அடங்குவர். இதில் 5 ஆண்கள் கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அமைதியின்மை சம்பவத்தில் இரு பொலிஸார் மற்றும் பெண் ஒருவரும் காயமடைந்த நிலையில் திருகோணமலை மாவட்ட மூதூர் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.














# காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்த ஐந்து கிராமங்கள் ஒரு குடையின் கீழ்!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் அடத்தாக காணிகளை கைப்பற்றி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யும் நோக்குடன் செயற்படும் குழுவால் பாதிப்படைந்துள்ள மக்கள், மன்னார் பிரஜைகள் குழுவை நாடியுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் காற்றாலை மற்றும் கனிய வள மணல் அகழ்வில் ஈடுபட முயலும் வெளிநாட்டு நிறுவனங்களுக்குக் காணிகள் வழங்கும் நோக்குடன் ஒரு குழுவினர் பொது மக்களின் தனியார் காணிகளை அடத்தாக பிடித்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக பாதிப்படையும் மக்கள் பொலிஸாரிடம் முறையீடு செய்தாலும் நீதி கிடைப்பதில்லை என்று தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் சுமார் 39 வருடங்களாக மக்களுக்காக குரல் கொடுத்து வரும் பிரஜைகள் குழுவின் உதவியை நாடியுள்ளனர்.

துள்ளுக்குடியிருப்பு கிராம அலுவலகர் பிரிவு கவ்வயன்குடியிருப்பு பகுதியில் 'மாஸ் மிடல் அன்ட் மினரல் பிரைவட் லிமிடட்' எனும் நிறுவனம் 160 ஏக்கர் வரையிலான காணியை சுற்றி முட்கம்பியால் அடைத்துள்ளது. அத்துடன் அங்குள்ள காடுகள் மற்றும் பனை மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.



இதனால் பனை மரங்களையே நம்பி வாழும் இந்தப் பகுதி மக்கள் தங்கள் காணிகள் அபகரிக்கப்படுவதையும் பனை மரங்கள் அழிக்கப்படுவதையும் சுட்டிக்காட்டி தங்களுக்கு இதிலிருந்து விமோசனம் கிடைக்க மன்னார் பிரஜைகள் குழுவை நாடியுள்ளனர்.

இதைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள கவ்வயன்குடியிருப்பு . துள்ளுக்குடியிருப்பு , பாவிலுப்பட்டான் குடியிருப்பு , நடுக்குடா மற்றும் கீழியன் குடியிருப்பு ஆகிய ஐந்து கிராமங்களும் ஒன்றிணைந்து பிரஜைகள் குழுவின் ஆதரவுடன் 'நமது குழந்தைகளுக்காக' என்ற அமைப்பை உருவாக்கி ஒன்றுபட்ட மக்கள் குரலாக செயல்பட்டு எதிரிகளை விரட்டுவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கான கருத்தமர்வு ஞாயிற்றுக் கிழமை (23) கவ்வயன்குடியிருப்பில் ஐந்து கிராம மக்களின் பிரதிநிதிகளுக்கும் பிரஜைகள் குழுவின் ஆளுநர் சபைக்கும் இடையில் இடம்பெற்றது.

# இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் நடுவராக மூதூரைச் சேர்ந்த பயாஸ்!



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, மூதூரைச் சேர்ந்த தௌபீக் முஹம்மட் பயாஸ், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் நடுவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து கிரிக்கட் சபையின் முதல்தர கௌண்டி கழகங்களில் ஒன்றான லின்பீல்ட் கிரிக்கெட் கழகத்தின் 17, 19 வயது மற்றும் கழக மட்ட இரண்டாம் நிலைப் போட்டிகளுக்கு 2024 ஆம் ஆண்டுக்கான பருவ காலப் பகுதியில் நடுவராக பணியாற்ற, இங்கிலாந்து கிரிக்கட் சபையின் அங்கீகாரத்துடன் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கசீர் மொஹம்மட் தௌபீக் – சாஹுல் கமீட் உம்மு மாஹிரா ஆகியோரின் மூத்த புதல்வராகிய பயாஸ், மூதூர் அல் ஹிதாயா மகா வித்தியாலயம் மற்றும், மூதூர் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின், கலைமானி பட்டதாரியும் ஆவார்.

தற்போது இவர், திருகோணமலை கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமைபுரிகின்றார்.

இலங்கை கிரிக்கட் சபையின் நடுவரான இவர், மூதூர் பிரதேசத்தின், சிறந்த இடதுகை துடுப்பாட்ட வீரரும், விக்கட் காப்பாளருமாவார். மூதூர் லெவன் பவர் கடின பந்து கிரிக்கெட் அணியின் தலைவரும், மூதூர் வெஸ்டன் வொறியஸ், திருமலை ஸ்பென்ஸ கழகங்களின் வீரருமான இவர், 2019 இல் தேசிய கிரிக்கெட் நடுவராக தெரிவு செய்யப்பட்டார்.

திருகோணமலை உட்பட இலங்கையின் பல மாவட்டங்களில் நடுவராகச் செயற்பட்டுள்ள இவர், தற்போது கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்து நாட்டிலும் நடுவராகச் செயற்பட உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# காதில் பூச்சூற்றும் ரணில்

வெளிநாடுகளிடமிருந்து கடந்த பல தசாப்தங்களாக வாங்கிக் குவித்த பல லட்சம் கோடி ரூபாக் கடன் நிலுவைகளை - தவணைக் கொடுப்பனவுகளை - இரண்டு வருடங்களுக்கு மேல் இலங்கை மீளச் செலுத்தவில்லை. குறைந்தபட்சம் அந்த நிலுவைகளுக்கான வட்டியைத் தன்னும் - ஒரு சதம் கூட - நாடு இன்னும் திரும்பிச் செலுத்தத் தொடங்கவில்லை. அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு அதை நாடு திரும்பிச் செலுத்தும் சாத்தியமும் இல்லை.

அதுவரை பொறுத்துக் கொள்ளுமாறு கடன் வழங்குநர்களிடமிருந்து அரசு கால அவகாசம் - கருணைக் காலம் - பெறப் போகின்றது என்று தெரிகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேல் கடன் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்த தவறியமையால்தான் கடனிறுக்க வக்கற்ற நாடு - வங்குறோத்து தேசம் - என்ற அவப்பெயர் நாட்டுக்கு வந்தது.

மேலும் 6 வருடங்களுக்கு அப்படியே கடன் மீளளிப்பை நிறுத்திக் கொண்டு, வங்குறோத்து நிலையிலிருந்து நாடு மீண்டு விட்டது என்று இன்றிரவு மக்களுக்கு அறிவிக்க போகின்றாராம் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நாட்டு மக்களின் காதில் பூச்சூற்றும் அரசியல் அற்பத்தனம் இது.

சர்வதேச சந்தையில் வாங்கிய விலைக்கு மேலும் பல மடங்கு வரிகளை விதித்து, எரிபொருளை உச்சப் பெறுமதிக்கு மக்கள் மீது கட்டியடிக்கின்றது அரசு. அதன் மூலம் பெருவருவாயை அரசு தேடிக் கொண்டிருப்பது கண்கூடு. கூடுதல் விலைக்கு எரிபொருளை விநியோகித்து லாபமீட்டிய படியே எரிபொருள் வரிசைகளை நிறுத்தியமையை சாதனையாகக் காட்டுகிறது இந்த அரசு.

நாட்டின் பொருளாதாரம் அப்படி ஒன்றும் சொல்லும்படியாக மேம்பட்டு விடவில்லை - சுற்றுலாப் பயண துறையைத் தவிர.

யுத்தத்தினாலும், முன்னைய அரசுகளின் கெடுபிடிப் போக்கினாலும், கவனிப்பின்மையினாலும், பொருளாதார பின்னடைவினாலும் சுருங்கிப்போன சுற்றுலாத்துறைக்கு சற்று ஊக்கம் அளித்திருக்கிறது இந்த அரசு என்பது உண்மைதான். அயல் தேசங்களில் சுற்றுலாத் துறை தொடர்பாக நேர்ந்த குழப்பங்களும் நமது நாட்டின் பக்கம் சுற்றுலாப் பயணிகளை திருப்பி விட்டிருக்கின்றது என்பதும் மறுக்கக் கூடியது அல்ல.

மற்றபடி பொருளாதாரத்தில் - ஏற்றுமதியில் - விவசாய உற்பத்தியில் - கைத்தொழில்துறை அபிவிருத்தியில் - டிஜிட்டல் விரிவாக்கத்தில் - அப்படி ஒன்றும் பெரிய மாற்றமோ, மீட்சியோ நாட்டுக்கு கிட்டிவிடவில்லை, வெறும் வாய்ப்பந்தல் பேச்சுகளைத் தவிர.

நாட்டின் தேசிய சொத்துக்களை விற்று நிதியாக்கியமை மூலமும், அளவுக்கு அதிகமான வரிச்சுமைகளை மக்கள் மீது சுமத்தியமை மூலமும், வங்குரோத்து நிலையில் தள்ளாடும் நாட்டின் மக்களுக்கு இந்தியா உட்பட்ட நாடுகள் பரிதாபத்தோடு வழங்கிய உதவிகளின் மூலமும், நாட்டின் மூலவளம் - நிபுணத்துவம் மிக்க - துறை சார்ந்த பணியாளர்களை நாட்டை விட்டு வெளியேறும் சூழ்நிலையை ஏற்படுத்தி அவர்கள் வாயிலாகக் கிடைக்கும் அந்நிய செலாவணி மூலமும் பெரும் வருமானத்தை அரசு தான் திரட்டி கொண்டு, அன்றாடம் காய்ச்சியாக நாட்டின் பொருளாதாரத்தைக் கொண்டு செல்கின்றது.

இந்தச் சீத்துவத்தில் வங்குறோத்து என்ற அவப்பெயரிலிருந்து நீங்கி விட்டோம் என மக்களுக்கு கயிறு விட முயலுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

காலம் காலமாக அரசின் சொத்தாக இருந்த காணிகள், நிலங்களை குடியிருப்பாளர்களிடமும், விவசாய செய்கை பண்ணுவோரிடமும் சட்ட ரீதியாக கையளிக்கின்றது ரணிலின் அரசு. ‘வழித் தேங்காயை தெருப் பிள்ளையாருக்கு அடித்து புண்ணியம் தேட முயற்சிப்பது போல’ அரச சொத்துக்களை வாரி வழங்கி, வாக்குத்தேட முயலுகின்றார் ஜனாதிபதி.

இது கூட தேசிய சொத்துக்களை வாரி வழங்கும் விடயத்துக்குள் வரும் எனினும், அதை நாட்டு மக்களுக்கு - உழைப்பாளர்களுக்கு - குடியிருப்பாளர்களுக்கே வழங்குவதால் அது மேலானதுதான்.

ஆனால் தேசிய சொத்துக்களையும் வளங்களையும் இந்த பொருளாதார நெருக்கடி சமயத்தில், அந்நிய தரப்புகளுக்கு விற்றுக்கொண்டு, அதுவும் மக்கள் அனுமதி இல்லாமல் வாரி வழங்கிக் கொண்டு, நாடு பொருளாதார மீட்சி காண்கின்றது என்று கதை விடுவது சுத்த அபத்தம். மக்களையும் கற்றறிந்த தரப்புக்களையும் முட்டாள்களாக்கும் சிறுமைத்தனம்.

ஏற்றுமதிப் பொருளாதாரம், விவசாயப் புரட்சி, டிஜிட்டல் மேம்பாடு என்று வாய்ச்சவடால் பேச்சுக்களை - உரைகளை - ஆற்றுவதன் மூலம் மட்டும் நாட்டின் பொருளாதார மேம்பட்டு விடாது.



# மன்னாரில் யுத்தத்தின் பின்னர் மீளக்குடியேறியோர் விவசாய நிலங்களை மீளப் பெற்றுத்தரக் கோரிக்கை

## மன்னாருக்கு விஜயம் செய்த உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் அரச அதிபர் எடுத்துரைப்பு



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது.மீள் குடியேற்றத்தின் பின்னர் நாங்கள் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதில் உள்ளது.

இவ்வாறு மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறி முறைகளுக்கான இடைக்கால செயலகத்தின் ஏற்பாட்டில் உத்தேச சட்ட வரைவு நிறுவுவதற்கு ஜனாதிபதியின் ஏற்பாட்டில் குறித்த குழு நேற்று செவ்வாய்க்கிழமை(25) மன்னருக்கு விஜயம் செய்தது.

மன்னார் மாவட்டச் செயலகத்தில் கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் பிரதேசச் செயலாளர் உள்ளிட்ட திணைக்கள தலைவர்களை உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க பொறி முறைகளுக்கான இடைக்கால செயலகத்தின் உத்தேச சட்ட வரைவு நிறுவுவதற்கான குழுவினர் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன் போதே மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் குறித்த குழுவினரிடம் விவசாயிகளது பிரச்சினைகளைத் தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்பட்டிருந்தது.மீள்குடியேற்றத்தின் பின்னர் நாங்கள் எதிர் நோக்கும் முக்கியமான பிரச்சினை பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்புவதில் உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் முக்கியமான வாழ்வாதார செயற்பாடாக விவசாயம் காணப்படுகின்றது. விவசாயத்தை விருத்தி செய்யப் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றோம்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் வன வளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் கிட்டத்தட்ட 36 வீதம் காணிகளை பிடித்துள்ளனன.

மேலதிகமாக புதிதாக 30 வீத காடுகளை உருவாக்கி உள்ளன. இவர்கள் ஜீ.பி.எஸ். மற்றும் கூகுள் படம் ஊடாக கூடுதலான நூறுக்கு மேற்பட்ட விவசாய குளங்களை தமது எல்லைக்குள் அடையாளப்படுத்தி உள்ளமையால் விவசாய அபிவிருத்தியை புனரமைப்பு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியேறிய பின்னர் தமது விவசாய நிலங்களை மீள பெற்றுத்தருமாறு கோருகின்றனர்.

அதன் அடிப்படையில் குறிப்பிட்ட விவசாய நிலங்கள் தற்போது வன வள திணைக்களத்திடம் இருந்து மீள பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

இதனால் மீள்குடியேறி பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

நல்லிணக்க அடிப்படையில் அவர்களின் நிலங்களை மீள வழங்குவதில் நாங்கள் சவால்களை எதிர் நோக்குகிறோம்.

1980 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்ததன் காரணமாகப் பொது மக்களால் பயன்படுத்தப்பட்ட இடங்கள் கூட சிறு காடுகளாக காணப்படுகின்றன.

இதன் காரணமாக 12 ஆயிரம் ஹெக்டேர் நிலத்தை குறித்த திணைக்களத்திடம் உரிய ஆதாரத்துடன் சமர்ப்பித்து பொது மக்களின் 1500 ஹெக்டயர் காணிகளே விடுவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களால்அடையாளம்காணப்பட்ட ஏனைய நிலங்களை விடுவிக்க முடியாத நிலை காணப்படுகிறது.- என்றார்.

இதேவேளை குறித்த குழுவினர் அரச அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள்,காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் உட்பட பல்வேறு தரப்புக்களையும் சந்தித்து உண்மை ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் உத்தேச சட்ட வரைவு குறித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யானை தாக்கியதால் வீடு, உடமைகள் சேதம்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம் சேரு நுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள சிறிமங்களபுர மெத கம கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் வீடு மற்றும் உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன என்று வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் இன்று (26) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வருடத்தில மாத்திரம் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் யானை தாக்குதலுக்கு இலக்காகி சேதமாக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் 65 வயது மதிக்கத் தக்க குடும்பஸ்தர் ஒருவர் யானை தாக்கியதில் காயமடைந்த நிலையில் தற்போதும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

எனவே யானைத் தொல்லையில் இருந்து தங்களை பாதுகாக்குமாறு அந்தப் பிரதேச மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# மட்டக்களப்பு மாவட்ட சமுதாய அபிவிருத்திக் குழுக் கூட்டம்!






(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட சமுதாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் மண்முனை வடக்குப் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை (25) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் கே.பகீரதனின் ஒழுங்கமைப்பில் மாவட் சமுர்த்திப் பணிப்பாளர் சு.ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் எஸ்.மனோகிதராஜ், மாவட்ட வங்கி விடயங்களுக்கான சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் திருமதி நிர்மலா தேவி கிரிதரராஜா, மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் சுதர்ஷினி பிரதீபன்,சமுர்த்தி அடிப்படை வங்கி முகாமையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட சமுர்த்தித் திணைக்களத்தின் கடந்தகாலச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது. 4 பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் செயற்படும் சமுர்த்திப் பிரதேச சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்களுக்கு விஷேட அடையாள அட்டைகளும் இதன்போது வழங்கப்பட்டன.





# மட்டுவில் புதிதாக நியமனம் பெற்றுள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெற்ற 82 கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி வேலைத்திட்டம் கடந்த ஜீன் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. ஜூலை மாதம் 2ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதன்போது புதிதாக நியமனம் பெறும் கிராம உத்தியோகத்தர்கள் எவ்வாறான விடயங்களை அறிந்திருக்க வேண்டும் என்பது தொடர்பிலான விடயங்கள் செயலமர்வுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பயிற்சி நெறியின் வளவாளர்களாக மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள்,திணைக்களத் தலைவர்கள் கலந்து கொள்கின்றனர்.



# திருகோணமலை வலய கபடிப் போட்டியில் திரியாய் தமிழ் ம.வி. மாகாணத்துக்குத் தெரிவு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை வலய பாடசாலைகளுக்கு இடையிலான கபடி போட்டியில் திரியாய் தமிழ் மகா வித்தியாலய 17 வயது பெண்கள் அணியினர் வெற்றி பெற்று மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இந்தக் கபடிப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை (24) திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட 17 வயது பெண்கள் அணியினர் இறுதிப் போட்டியில் திருகோணமலை கலைமகள் தமிழ் வித்தியாலயத்தை எதிர்கொண்டு 29-8 புள்ளிகள் என்ற வித்தியாசத்தில் திருகோணமலை வலய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை ஆசிரியர் எஸ்.எச்.எம் தாகிப் பயிற்றுவித்திருந்தார். பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக திரியாய் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் மாகாண மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காலக் கண்ணாடியான கவிஞர் இ.முருகையன்!


**கவிஞர் இ. முருகையனின் 15ஆம் ஆண்டு நினைவுதினம் நாளை ஆகும்.**

**( ஜங்கரன் விக்கினேஸ்வரா )**

மனிதநேயமிக்க இ.முருகையன் தனது 74 ஆவது வயதில் காலமானாலும், அவரது கவிதைகளும், நாடகங்களும் என்றும் நிலைத்து நிற்கும் வரலாற்று ஆவணங்களாகின்றன.

கவிஞர் இ. முருகையன் எமது காலத்தில் ஆற்றல் மிக்க படைப்பாளியாக விளங்கியதால் அவரது படைப்புகள் முக்கியமான கணிப்புக்கு உரியதாகின்றன. அவரின் படைப்புக்கள் நவீன தமிழ் கவிதை உலகில் ஒளி பாய்ச்சுவனவாகவும் அமைகின்றன.

ஒரு மொழி உலகியலின் பல துறைகளிலும் துணிவுடன் புகுந்து, கருத்துக்கள் எவ்வளவு சிக்கலானவையாக இருந்தாலும், எவ்வளவு நுணுக்கமானவையாக இருந்தாலும், அவற்றை அப்படியே அச்சொட்டாகத் திரிபின்றி எடுத்துரைக்கும் வல்லமையைப் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கூறும் ஈழத்தின் முன்னணிக் கவிஞர்களுள் ஒருவரான இ. முருகையன் யாழ். தென்மராட்சியில் கல்வயல் கிராமத்தில் ஏப்ரல் 23, 1935 பிறந்தவர்.



கவிஞர். இ. முருகையன் தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்துவமான பாதையில் வரித்துச் சென்றவர் என்பதில் இருநிலைப்பட்ட கருத்துகளுக்கு இடமில்லை. யாவற்றுக்கும் மேலாக அவர் தமிழ் அறிஞராகவும், திறனாய்வாளராகவும் சீரிய முற்போக்குச் சிந்தனையாளராகவும் விளங்கினார்.

மொழி முன்னேற வேண்டுமானால் அதனைப் பேசும் மக்கள் முன்னேற வேண்டும். அந்த மக்களின் பொருளியல், வர்த்தக, விஞ்ஞான, தொழில்நுட்பத்துறைகள் யாவும் முன்னேறியிருத்தல் வேண்டும். இந்தப் பலதுறை முன்னேற்றத்தின் உயிர்ப்புள்ள தொரு கருவியாக அந்த மக்களின் மொழி பயன்படவேண்டும் என அடித்துரைக்கும் கவிஞர் முருகையன் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் 1956 இல் விஞ்ஞான ஆசிரியப் பணியைத் தொடங்கி பின், அரச மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகவும், பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்தில் முதன்மைப் பணிப்பாளராகவும், கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களில் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

இறுதியாக, 1986 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் முதுதுணை பதிவாளராகப் பணியாற்றி 1995 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். இலங்கை அரச கரும மொழிகள் திணைக்களத்தில் பணியாற்றிய முருகையன் தமிழ் கலை சொல்லாக்கத்துக்கு கணிசமானளவு பங்களிப்பைச் செலுத்தியுள்ளார்.

வலிமையும் வளமும் வினைத்திறனும் தமிழ் மொழிக்கு வாய்க்கும் வகையில் உழைப்பதுதான் உண்மையான தமிழறிஞர்கள் செய்ய வேண்டிய உயிர்ப்புள்ள பணியாகும் எனக் கவிஞர் முருகையன் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு தமிழறிஞர்கள் ஆற்ற வேண்டிய பணியை சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவராயிருந்த இ. முருகையன் அந்தப் பேரவையின் தொடக்க காலத்திலிருந்தே பங்கெடுத்து வந்ததுடன் தேசிய கலை இலக்கியப் பேரவையின் சஞ்சிகையான தாயகம் இதழின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தார்.

அறிவாயுதமாகவும், அரசியல் ஆயுதமாகவும், வர்த்தகத் தொழில் நுட்ப ஆயுதமாகவும் மொழி பயன்பட வேண்டும். அப்பொழுது தான் அந்த மொழி முன்னேறிய மொழியாகும், என்று தன் வாழ்வையே தமிழ் இலக்கியத்துக்காக பதிவு செய்த முருகையனுக்கு இலங்கை அரசினால் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் அதிஉயர் விருதான சாகித்திய இரத்தினம் விருது 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

முருகையனது கவிதைகள் எப்பொழுதுமே ஆய்வறிவுப் பண்புடையனவாய் இருத்தல் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதாகும். உணர்ச்சி வெள்ளத்தில் அடிபட்டுப் போகாமல் நிதானித்து விஷயங்களை ஆழமாக நோக்கிக் கவிபாடும் நோக்கும், போக்கும் அவரின் கவிதைகளின் சிறப்பியல்புகள் ஆகும். மனிதநேயமிக்க இ.முருகையன் எழுதிய ஒரு வரம், நெடும்பகல், அது–அவர்கள், மாடும் கயிறு அறுக்கும், நாங்கள் மனிதர், ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும், ஆதிபகவன் ஆகிய கவிதை நூல்கள் முக்கியத்துவம் பெற்ற படைப்புக்களாகும்.

கணிதம், தருக்கம், மெய்யியல், தொழில் நுட்பம், விஞ்ஞானம், அரசியல், ஆன்மிகம், வணிகம், ஆட்சியியல் முதலான அனைத்துத்துறைகளையும் அளாவி, அளந்து, அலசி, அனைத்தையும் தழுவிச் செல்லும் பன்முகமான திறமைபெற்ற மொழியே வளர்ச்சியடைந்த, அபிவிருத்தி பெற்ற, மேம்பாடுற்ற முழுமையான தொடர்புச்சாதனமாகத் திகழும் மனித நாகரிகத்தின் திறம்பட்ட கருவியாகவும், பண்பாட்டு உயர்ச்சியின் துணைக்காரணமாகவும் தொழிற்படும் எனப்பறைசாற்றும் இக்கவிஞர் எழுதிய மேடை நாடகங்கள் நூல்களுல் கடூழியம், அப்பரும் சுப்பரும், திறனாய்வு நூல்களான ஒருசில விதி செய்வோம், போன்றவை புகழ்பெற்றவையாகும். இன்றைய உலகில் இலக்கியம்கவிதை நயம் எனும் நூலை பேரா. க. கைலாசபதியுடன் இணைந்து எழுதியதும் குறிப்பிடத்தக்கது.

இவர் எழுதிய, 'மொழிபெயர்ப்பு நுட்பம் – ஓர் அறிமுகம்' என்னும் நூல் மொழி பெயர்ப்பின் தேவையானது நாள்தோறும் வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கும் இந்தச் சூழலில் மிகவும் அவசியமானது ஆகும். மேலும், மொழிபெயர்ப்பு முயற்சியில் முழுமூச்சோடு இறங்கி செயல்படும் ஒருவர் விரைவில் ஒரு கைதேர்ந்த, சிறந்த மொழி பெயர்ப்பாளராக வளர்ச்சி அடைய மிகவும் பயனுடையதாகும்.

மனிதநேயமிக்க இ.முருகையன் 27.06.2009 அன்று தமது 74 ஆவது வயதில் காலமானாலும், அவர் மறைவின் பின்னரும் உலகத் தமிழர்கள் மத்தியில் அவரது கவிதைகளும், நாடகங்களும் என்றும் நிலைத்து நிற்கும் வரலாற்று ஆவணங்களாகின்றன.







# எமாறெல்ட் வெற்றிக் கிண்ணச் சுற்று;
# பிளைங் ஹோர்ஸ் அணி சம்பியன்!

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

நிந்தவூர் எமாறெல்ட் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், எமாறெல்ட் வெற்றிக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது பிளைங் ஹோர்ஸ் அணி.

அம்பாறை மாவட்டத்தின் பலம் வாய்ந்த 24 முன்னணிக் கழகங்களை இணைத்து, அணிக்கு 8 வீரர்கள், 5 பந்து வீச்சு ஓவர்கள் என்ற அமைப்பில் மென்பந்து சுற்றுப் போட்டி எமாறெல்ட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நிந்தவூர் பொது மைதானத்தில் இடம்பெற்றது.

இந்தச் சுறுப்போட்டியின் இறுதிப் போட்டிக்குச் சாய்ந்தமருது பிளைங் ஹோர்ஸ் விளையாட்டுக்கழகமும், நிந்தவூர் ஹிக்மாஹ் விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.

இந்த இறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற ஹிக்மாஹ் அணியினர், முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்து நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் (20 பந்துகள்) 41 ஓட்டங்களை 3 விக்கெட் இழப்புக்கு பெற்றுக்கொண்டனர்.

பதிலுக்கு 42 என்ற வெற்றியிலக்கைக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளைங் ஹோர்ஸ் அணியினர், ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 17 பந்துகளில் 43 என்று 3 பந்துகள் மீதமிருக்க 7 விக்கட்டுகளால் அபார வெற்றியீட்டி, கிண்ணத்தையும், 25 ஆயிரம் ரூபா பணப்பரிசையும் பெற்றுக்கொண்டனர்.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாகவும் தொடரின் சிறந்த பந்து வீச்சாளராகவும் பிளைங் ஹோர்ஸின் ஆஷிம் (பொறியியலாளர்), சிறந்த துடுப்பாட்ட வீரராக ஸாஜித், தொடரில் தொடராக சிக்ஸர்களை விளாசிய வீரர் என றிபான் (உடற்கல்வி ஆசிரியர்) ஆகியோர் தெரிவாகி கிண்ணங்களையும், பணப் பரிசில்களையும் பெற்றுக் கொண்டனர்.








# இன்று திருக்கோவிலில் உறுமய உறுதிப் பத்திரம் வழங்கல்

**(வி.ரி.சகாதேவராஜா)**

ஜனாதிபதியின் தேசிய வேலைத் திட்டமான உறுமய காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நடமாடும் நிகழ்வு திருக்கோவில் பிரதேச செயலகத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இன்று (26) புதன்கிழமை நடைபெற்றது.







# அட்டாளைச்சேனையில் இரு பயனாளிகளுக்கு ரன் விமன வீட்டுத் திட்டத்துக்கு அடிக்கல் நடல்!

(நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேசத்துக்கு உட்பட்ட சம்பு நகர் மற்றும் பாலமுனை - 06 போன்ற பகுதிகளைச் சேர்ந்த இரண்டு சமுர்த்திப் பயனாளி குடும்பங்களுக்கு வீடமைத்து வழங்கப்படவுள்ளன.

சமுர்த்தி சமூகப் பிரிவினால் ரன் விமன வீட்டுத் திட்டத்தின் கீழ் தலா 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு இரு வீடுகளுக்கும் நேற்று (25) அடிக்கல் நடப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் இர்பான், உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முசாபிர் மற்றும் சமுர்த்தித் தலைமைப் பீட முகாமையாளர், வங்கி முகாமையாளர்கள் ஏனைய முகாமையாளர்கள் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# ஆபிரிக்காவில் இன்னோர் புதிய தேசம் பிறக்கிறதா?

# சோமாலியாவில் சுயாட்சி கோரும் சோமாலிலாந்து!




- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

சோமாலிலாந்து (SomaliLand) 30 ஆண்டுகளுக்கு முன்பு சோமாலியாவிலிருந்து சுயாட்சி கோரி பிரிந்த ஓர் தனிநாடாகும். ஆனால் சர்வதேச அளவில் இன்னமும் அங்கீகரிக்கப்படவில்லை.

## சோமாலிலாந்தும் சோமாலியாவும்

எத்தியோப்பியா அரசுக்கு கடல் பாவனையை வழங்கினால், அதற்கு ஈடாக எதிர்காலத்தில் ஒரு கட்டத்தில் சோமாலிலாந்தின் சுதந்திரத்தை அங்கீகரிக்க ஒப்புக் கொண்டதாக முன்பு கூறியது.

1991 இல் சோமாலிய இராணுவ சர்வாதிகாரி சியாட் பாரே தூக்கியெறியப்பட்ட பின்னர், பாலைவனப் பிரதேசமான சோமாலிலாந்து, ஏடன் வளைகுடா கடற்கரையில் ஒரு பிரிந்து சென்று சுதந்திரத்தை அறிவித்தது.

இந்த நடவடிக்கையானது ஒரு பிரிவினைவாதப் போராட்டமாக நீண்டு தொடர்ந்தது. சியாட் பாரேவின் படைகள் கிளர்ச்சியாளர் கெரில்லாக்களை பிரதேசத்தில் எதிர்த்து பின்தொடர்ந்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் பல நகரங்கள் சோமாலிலாந்தில் தரைமட்டமாக்கப்பட்டன.

## சர்வதேசஅங்கீகாரம் இல்லை!

சோமாலிலாந்து சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்படாவிட்டாலும், அங்கு செயற்படும் அரசியல் நிர்வாக அமைப்பு, அரசு நிறுவனங்கள், பொலிஸ் படை மற்றும் அதன் சொந்த நாணயத்தைக் கொண்டுள்ளது.

முன்னைய இராணுவ ஆட்சியின் பின்னர் சோமாலியாவில் குழப்பங்கள் மற்றும் வன்முறைகளில் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

## எத்தியோப்பியா-சோமாலிலாந்து கடல் ஒப்பந்தம்

எத்தியோப்பியா–சோமாலிலாந்து ஒப்பந்தத்தை ஆக்கிரமிப்புச் செயல் என்று சோமாலியா அழைக்கிறது.

ஜனவரி 2, 2024 அன்று சோமாலியாவின் மொகடிவில் எத்தியோப்பியா–சோமாலிலாந்து துறைமுக ஒப்பந்தம் தொடர்பாக சோமாலியாவின் ஜனாதிபதி ஹசன் ஷேக் முகமது நாடாளுமன்றத்தில் உரையாற்றினார்.

நிலத்தால் முழுமையாக சூழப்பட்ட எத்தியோப்பியா, சோமாலிலாந்தின் சுய–அறிவிக்கப்பட்ட குடியரசுடன் கடல் அணுகல் தொடர்பாக செய்து கொண்ட ஒப்பந்தத்தை “ஆக்கிரமிப்பு” என்று சோமாலியா அரசு விவரித்துள்ளது.

சோமாலிலாந்துடன் எத்தியோப்பியா ஒப்பந்தம் செய்து கொண்டதைத் தொடர்ந்து சோமாலிய அதிபர் ஹசன் ஷேக் முகமது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் உரையாற்றினார்.

அத்துடன் சர்ச்சைக்கு உரிய இந்த ஒப்பந்தத்தின் முழு அம்சத்தை எத்தியோப்பியா உறுதிப்படுத்தவில்லை.

அதற்குப் பதிலாக, எத்தியோப்பியாவின் பிரதம மந்திரி அபி அகமதுவின் அலுவலகம், “கடலுக்கான அணுகலைப் பாதுகாப்பதற்கும், துறைமுகங்களுக்கான அணுகலைப் பன்முகப்படுத்துவதற்கும்” புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) எனப்படும்

தொடர்ச்சி▼

# ஆபிரிக்காவில் இன்னோர் புதிய தேசம் பிறக்கிறதா?

# சோமாலியாவில் சுயாட்சி கோரும் சோமாலிலாந்து!

தொடர்ச்சி▲

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதாகக் கூறியது.

எத்தியோப்பியாவின் பிரதம மந்திரி அபி முன்னர் கடல் அணுகலை தனது நாட்டிற்கு “இருத்தலியல் பிரச்சினை” என்று விவரித்தார். அவரது தேசிய பாதுகாப்பு ஆலோசகர், றெட்வான் ஹுசைன், எத்தி யோப்பியாவிற்கு கடலில் “குத்தகைக்கு விடப்பட்ட இராணுவ தளத்தை” அணுகுவதற்கு இந்த ஏற்பாடு உதவும் என்றும் கூறினார். ஆனால் அவர் கூடுதல் விவரங்களை வழங்கவில்லை.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒரு நோக்கத்தின் அறிக்கையாகக் கருதப்படுகிறது. மற்றும் சட்ட பூர்வ மாகப் பிணைக்கப்பட்ட ஒப்பந்தத்துக்கு வழிவகுக்கும் எனவும் எத்தியோப்பியாவின் பிரதம மந்திரி அலு வலகம் கூறியது.

### சோமாலியா அரசு கண்டனம்

ஆயினும் இந்த வளர்ச்சியை இரு தரப்பினரும் ஒரு பெரிய இராஜதந்திர நடவடிக்கையாக சித்த ரித்து வருகின்றனர். சோமாலியா, சோமாலிலாந்தை தனது பிரதேசத்தின் ஒரு பகுதியாகக் கருதுவதால், புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குக் கோபமாக பதில ளித்துள்ளது.

எத்தியோப்பியாவுக்கான தனது தூதரை திரும்ப அழைப்பதாக அது கூறியது. இந்த ஒப்பந் தம் செல்லாது என்றும் அதன் இறையாண்மையை மீறுவதாகவும் சோமாலியா அரசு கூறியது.

சோமாலியா அரசு இந்த நடவடிக்கையை ஒரு ஆக்கிரமிப்பாகக் கருதுகிறது. ஏற்கனவே பல சவால்களுடன் போராடி வரும் பிராந்தியத்தின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இது ஒரு தடையாக உள்ளது என்று மேலும் கூறியுள்ளது.

சோமாலியாவின் பிரதமர் ஹம்சா அப்டி பாரே, மக்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்.

சோமாலியா நாட்டின் பாதுகாப்பில் நாங்கள் உறுதி யாக இருக்கிறோம் என்பதை நான் அவர்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறேன். எங்கள் நிலம், எங்கள் கடல் மற்றும் எங்கள் காற்றின் ஒரு பகுதியை மீற முடியாது, நான் அதை எல்லா சட்ட வழிகளிலும் பாதுகாப்பேன் என்று அவர் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

### சோமாலிலாந்து பிரிய தடை

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ஹசன் ஷேக் மொஹமட் “சோமாலியாவின் ஒரு துண்டையும் கொடுக்க யாருக்கும் அதிகாரம் இல்லை” என்று கூறினார் என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

“சோமாலிலாந்து, நீங்கள் சோமாலியாவின் வடக்குப் பகுதிகள். எத்தியோப்பியா உங்களுக்கு எந்த அங்கீகாரமும் இல்லை,” என்று அவர் மேலும் கூறினார்.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் மற்றும் ஆப்பி ரிக்க ஒன்றியம் இந்த விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்றும் சோமாலியா அரசு கூறியுள்ளது.

எத்தியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபாவில் பிரதமர் அபியும் சோமாலிலாந்து அதிபர் மியூஸ் பிஹி அப்டியும் ஜனவரியில் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் சரியான விவரங்கள் தெரியவில்லை.

எத்தியோப்பியா எதிர்காலத்தில் சோமாலி லாந்தை ஒரு சுதந்திர நாடாக அங்கீகரிக்கும் என்ற ஒரு பகுதியை இந்த ஒப்பந்தத்தில் உள்ளடக்கியதாக திரு அப்டி கூறினார். சோமாலிலாந்தின் வெளியுறவு அமைச்சகம் ஒரு அறிக்கையில், “இந்த ஒப்பந்தம் எத்தியோப்பியாவின் கடற்படைப் படைகளுக்கு கடலை அணுகுவதை உறுதி செய்கிறது. சோமாலிலாந்து குடியரசின் முறையான அங்கீகாரத்தின் மூலம் இது நமது நாட்டுக்கான குறிப்பிடத்தக்க இராஜதந்திர மைல்கல் எனக் குறிக்கிறது.

### எத்தியோப்பிய கடற்படைக்கு அனுமதி

எத்தியோப்பிய கடற் படைகளுக்கு 20 கி.மீ. (12 மைல்) கடல் அணுகல் பரிமாற்றத்தில், 50 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படும் என்று சோமாலிலாந்து குடியரசின் ஜனாதிபதி கூறினார் என்று தகவல்கள் தெரிவித்தனர்.

சோமாலியாவில் சுயாட்சி கோரும் சோமாலிலாந்து, ஆபிரிக்காவில் இன்னோர் புதிய தேசம் பிறக்கிறதா என்பதை எதிர்காலத்தில் புலப்படுத்தும்.





# கால்நடை வளர்ப்போருக்கு பேசாலையில் விழிப்புணர்வு



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார், பேசாலையில் கால்நடை வளர்ப்போருக்கு கால்நடை வளர்ப்பு தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தமர்வு இடம்பெற்றது.

பேசாலை பொது மண்டபத்தில் பேசாலை கால்நடை வளர்ப்போர் சங்கத் தலைவர் அன்ரன் பெல்டானோ தலைமையில் செவ்வாய்கிழமை இது இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட மன்னார் கால்நடை வைத்திய அதிகாரி திருமதி ஏ.ஜே.மரிய துரம் இன்றைய சூழலில் கால்நடையை எவ்வாறு வளர்க்க வேண்டும் என்பதை விரிவாக எடுத்துரைத்தார்.

விஷேடமாக பேசாலையில் கோழி வளர்ப்போரே அதிகமாக காணப்படுகின்றனர். முன்னைய காலங்கள் போன்று தற்பொழுது வீடுவீடாகச் சென்று கோழிகளுக்கு ஊசி போட முடியாத நிலை காணப்படுகிறது

ஆளணி பற்றாக்குறை போக்குவரத்துப் பிரச்சினைகள் இருக்கின்ற போதும் மக்களின் வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு இவற்றை கைவிட முடியாது.

இந்த நிலையில் கோழி, ஆடு, மாடு வளர்ப்போர் தொடர்பில் கவனம் எடுத்து, ஒவ்வொரு பகுதியிலும் குழுக்களை அமைத்து அவர்கள் மூலம் கால்நடை வளர்ப்போரின் தேவைகளை அறிந்து அதற்கேற்றவாறு செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27ஆவது மாநாடு எதிர்வரும் 30 இல்!

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27 ஆவது வருட மாநாடு எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9:30 மணிக்கு தபால் அமைச்சின் கேட்போர் கூடத்தில் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தலைமையில் நடைபெறும்.

இந்த மாநாட்டின் முதல் அமர்வில் பிரதம அதிதியாக இலங்கையின் ஐக்கிய நாடுகள் சபை வதிவிட இணைப்பாளர் மார்க்ஸ் அன்றோ ரன்சே கலந்து கொள்வார்.

கௌரவ அதிதியாக இலங்கையின் ஈரான் இஸ்லாமிய குடியரசுத் தூதுவர் டாக்டர் அலி றீஸா டெல்கோஸ் கலந்து கொள்வார்.

பிரதம பேச்சாளராக பிரபல எழுத்தாளர் எம்.எல்.ஏ. மன்சூரும் கௌரவ பேச்சாளராக இந்திய – யூனியன் முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளரும், முன்னாள் சட்ட சபை உறுப்பினருமான கே.ஏ.எம். முஹம்மட் அபூபக்கரும் கலந்து கொள்வர்.


சண்டே ஐலேண்ட் பத்திரிகையின் ஆசிரியர் மெனிக் டி சில்வா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

அத்துடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபனத்தின் சிரேஷ்ட ஒலிபரப்பாளர் திருமதி புர்கான் பீ இப்திகார், ஐ.டி. என். வசந்தம் தொலைக்காட்சியின் முகாமையாளர் எம். சித்தீக் ஹனீபா, பிறை எப்.எம். பிரதானி பஷீர் அப்துல் கையூம், மூத்த ஊடகவியலாளர்களான சுஐப் எம். காசீம், எம்.எஸ். அமீர் ஹுஸைன், பிராந்திய ஊடகவியலாளர் எம்.எம்.எம் பஸீர், வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீகஜன், தினக்குரல் ஆசிரியர் ஆர். பீ. ஹரன், உதயம் செய்தி ஆசிரியர் சிராஜ் எம். ஷாஜகான் ஆகியோரும் இதன்போது விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நிகழ்வில் போரத்தின் உதவித் தலைவர் றிப்தி அலி தகவல் அறியும் சட்டம் தொடர்பான ஊக்குவிப்புக்காக விசேடமாகக் கௌரவிக்கப்படவுள்ளார்.

# இந்திய சபாநாயகராக திரும்பவும் ஓம் பிர்லா!

## வாக்கெடுப்பில் 297 - 232 என்ற அடிப்படையில் தெரிவு




**டெல்லி, ஜுன்26**

இந்திய நாடாளுமன்றத்தின் சபாநாயகராக ஓம் பிர்லா மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 293 இடங்களை கைப்பற்றியது. பா.ஜ.க. தனித்து 240 இடங்களைக் கைப்பற்றியது. எதிர்க்கட்சிகளின் ‘இண்டியா’ கூட்டணி 234 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றியது. இதையடுத்து, பிரதமர் மோடி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 3 ஆவது முறையாக ஆட்சியமைத்தது.

இதனிடையே, நாடாளுமன்ற மக்களவை சபாநாயகராக யார் நியமிக்கப்படுவார் என்பதில் பரபரப்பு நீடித்து வந்தது. பொதுவாக ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி இணைந்து சுமுகமாக மக்களவை சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பது வழக்கம். ஆனால், இந்த முறை பா.ஜ.க. – காங்கிரஸ் இடையே சபாநாயகரை தேர்ந்தெடுப்பதில் போட்டி ஏற்பட்டது.

நாடாளுமன்ற மக்களவை சபாநாயகராக ஓம் பிர்லாவை நியமிக்க ஆதரவு தரவேண்டுமென காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளிடம் பா.ஜ.க. கோரிக்கை விடுத்தது. ஆனால், துணை சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்கினால் சபாநாயகராக ஓம் பிர்லாவை நியமிக்க ஆதரவு தருவோம் என காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணி நிபந்தனை விதித்தது. இந்த நிபந்தனையை பா.ஜ.க. ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும், சபாநாயகர் பதவிக்கு போட்டியிட பா.ஜ.க. சார்பில் ஓம் பிர்லா வேட்பு மனு தாக்கல் செய்தார்.

இதனை தொடர்ந்து இண்டியா கூட்டணி சார்பில் கொடிக்குனில் சுரேஷை காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தியது. இதன் மூலம் சபாநாயகர் பதவிக்கு பா.ஜ.க. – காங்கிரஸ் இடையே நேரடி மோதல் ஏற்பட்டது. தேர்தல் வாக்கெடுப்பு மூலம் சபாநாயகரை தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை உருவானது. சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்ற வரலாற்றில் சபாநாயகர் பதவிக்கு தேர்தல் நடைபெறுவது இதுவே முதல் முறையாகும்.

இந்நிலையில், சபாநாயகர் பதவிக்கான தேர்தல் இன்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. குரல் வாக்கெடுப்பு மூலம் சபாநாயகர் பதவிக்கான தேர்தல் நடைபெற்றது. இதில், பா.ஜ.க. வேட்பாளரான ஓம் பிர்லா 297 வாக்குகள் பெற்றார். காங்கிரஸ் வேட்பாளரான சுரேஷ் 232 வாக்குகள் பெற்றார். இதன் மூலம் மக்களவை சபாநாயகர் தேர்தலில் ஓம் பிர்லா வெற்றிபெற்றார் என அறிவிக்கப்பட்டது. ஓம் பிர்லா 2 ஆவது முறையாக சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



அவருக்கு பிரதமர் மோடி, மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்பட பலரும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

# இந்திய நாடாளுமன்றத்தில் இன்று முதல் நாளே கூச்சல்

இந்திய நாடாளுமன்றத்தில் இன்று முதல் நாள் முதல் அமர்விலேயே குழப்பம் ஏற்பட்டது. எதிர்க்கட்டிகள் கூச்சலிட்டுக் குழப்பம், ரகளை செய்தனர்.

மக்களவை சபாநாயகர் பதவிக்கான தேர்தல் இன்று நடைபெற்றது. இந்த தேர்தலில் மக்களவை சபாநாயகராக மீண்டும் ஓம் பிர்லா தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து பிரதமர் மோடி, எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி இணைந்து ஓம் பிர்லாவை சபாநாயகர் இருக்கையில் அமர வைத்தனர்.

சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு பிரதமர் மோடியும், எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் கைகுலுக்கி வாழ்த்து தெரிவித்தனர். இதையடுத்து சபாநாயகர் உரையாற்றினார்.

அவர் உரையை ஒட்டியே குழப்பம் வெடித்தது.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி அவசரகால சட்டத்தை ஜுன் 25 ஆம் திகதி கொண்டு வந்தமையயை ஒட்டி புதிய சபாநாயகர் பேசியமையினால் குழப்பம் ஏற்பட்டது.

புதிய சபாநாயகர் தமது உரையில் –

- ❒ முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி நாட்டில் எமர்ஜென்சியை அமல்படுத்தினார்.
- ❒ இந்திரா காந்தியால் சர்வாதிகாரம் திணிக்கப்பட்டது. 25 ஜுன் 1975 எப்போதும் கறுப்பு தினமாக அறியப்படும்.
- ❒ எமர்ஜென்சியின்போது நாட்டின் அதிகாரத்தை சிதைத்ததோடு ஒட்டுமொத்த தேசமும் சிறைக்குள் அடைக்கப்பட்டது.
- ❒ எமர்ஜென்சி காலத்தில் ஊடக சுதந்திரம் நசுக்கப்பட்டது

– என்று கூறினார்.

இதையடுத்து எமர்ஜென்சி காலத்தில் உயிர்நீத்தவர்களுக்கு மக்களவையில் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

எமர்ஜென்சியை நினைவுகூர்ந்து மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா பேசிய நிலையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து கூச்சலிட்டனர்.

இதையடுத்து மக்களவை நாளை காலை 11 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.



# அமெரிக்க நீதிமன்றில் அசாஞ்சே விடுவிப்பு!

## உடனே தாயகமான ஆஸிக்குப் புறப்பட்டார்

**வொஷிங்டன், ஜூன் 26**

உளவு வழக்கில் ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்க நீதிமன்றம் விடுதலை செய்தது. இதையடுத்து அவர் ஆஸ்திரேலியா புறப்பட்டார்.

விக்கிலீக்ஸ் நிறுவன தலைவர் ஜூலியன் அசாஞ்சே. இவர் ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் அமெரிக்கா நடத்திய போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், ஊழல் தொடர்பான இரகசிய ஆவணங்களை ஹக் செய்து விக்கிலீக்ஸ் இணைய தளத்தில் வெளியிட்டார். இந்தச் சம்பவம் உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து, ஜூலியன் அசாஞ்சே மீது உளவு வழக்கு பதிவு செய்து தேடப்படும் குற்றவாளியாக அமெரிக்கா அறிவித்தது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா கொடுத்த நெருக்கடிகளின் காரணமாக இங்கிலாந்தில் உள்ள ஈகுவடார் தூதரகத்தில் தஞ்சம் அடைந்த அசாஞ்சே, கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் லண்டனில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார். உளவுக் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்காவிற்கு கொண்டு வரும் சட்ட நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு தொடங்கியது.

இதையடுத்து, ஜூலியன் அசாஞ்சேவை அமெரிக்காவிற்கு நாடு கடத்தும்படி இங்கிலாந்து அரசு 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் உத்தரவிட்டது. அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்படுவதை எதிர்த்து அசாஞ்சே இங்கிலாந்து நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். இந்த வழக்கு விசாரணை இங்கிலாந்து நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

அதேவேளை, இங்கிலாந்து சிறையில் இருந்த அசாஞ்சே, அமெரிக்காவின் நீதித்துறையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். அமெரிக்க இராணுவ ரகசிய ஆவணங்களை விக்கி லீக்ஸில் வெளியிட்ட குற்றத்தை ஒப்புக்கொள்வார் என ஜூலியன் அசாஞ்சே தெரிவித்தார்.



அசாஞ்சே தாயகமான ஆஸிக்குத் திரும்பும் பாதை

இந்த வழக்கு தொடர்பாக அமெரிக்காவில் ஆஜராகவும் ஒப்புக்கொண்டார்.

உளவு குற்றத்திற்கு அமெரிக்காவில் 62 மாதங்கள் (1,860 நாள்கள்) சிறை தண்டனை விதிக்கப்படும். ஆனால், அசாஞ்சே ஏற்கனவே 1,901 நாள்கள் இங்கிலாந்து சிறையில் இருந்துள்ளார். இதனால், இராணுவ ரகசியங்களை வெளியிட்ட குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் அதற்கான தண்டனையை ஏற்கனவே இங்கிலாந்து சிறையில் அனுபவித்து விட்டமையால் விடுதலை செய்ய வேண்டும் என அமெரிக்க நீதித் துறையிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்க நீதித் துறை சம்மதம் தெரிவித்ததையடுத்து இங்கிலாந்து சிறையில் இருந்து அசாஞ்சே நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான அசாஞ்சே தனி விமானம் மூலம் அமெரிக்கா புறப்பட்டார். இன்று அவர் அமெரிக்காவின் மெரினா தீவில் உள்ள நீதிமன்றத்தில் ஆஜரானார். மெரினா தீவு அசாஞ்சேவின் சொந்த நாடான ஆஸ்திரேலியாவுக்கு மிக அருகில் உள்ளது.

நீதிமன்றத்தில் ஆஜரான அசாஞ்சே, அமெரிக்க தேசிய பாதுகாப்பு தொடர்பான இரகசிய ஆவணங்களைத் திரட்டி உளவு வேலையில் ஈடுபட்டமைக்கான குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதையடுத்து, உளவு குற்றச்சாட்டிற்காக அசாஞ்சேவுக்கு 5 ஆண்டுகள் 2 மாதங்கள் (ஒட்டுமொத்தமாக 62 மாதங்கள்) சிறை தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அசாஞ்சே ஏற்கனவே இங்கிலாந்தில் 62 மாதங்கள் சிறை தண்டனை அனுபவித்துவிட்டதால் அவர் விடுவிக்கப்படுகின்றார் என நீதிமன்றம் தெரிவித்தது. இதனை தொடர்ந்து உளவு வழக்கில் இருந்து ஜூலியன் அசாஞ்சே விடுவிக்கப்பட்டார்.

இதையடுத்து, அமெரிக்காவின் மெரினா தீவில் இருந்து விமானம் மூலம் ஜூலியன் அசாஞ்சே ஆஸ்திரேலியா புறப்பட்டார். இதன் மூலம் ஜூலியன் அசாஞ்சேவின் சட்டப்போராட்டம் முடிவுக்கு வந்து அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.




# முதல் முறையாக இறுதிக்குள் நுழையப் போகும் அணி எது?

இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், அரையிறுதி யாட்டங்கள் நாளை ஆரம்பிக்கின்றன.

இதன் முதலாவது அரையிறுதி யாட்டம் நாளை காலை 6மணிக்கு (இலங்கை நேரம்) நடைபெறவுள்ளது. இதில் இதுவரை எந்தவொரு உலகக் கிண்ணத்தையும் நுகர்ந்து பாராத - இறுதியாட்டத்துக்குக் கூட நுழையாத தென்னாபிரிக்க - ஆப்கானிஸ்தான் அணிகள் களம் காண்கின்றன.

நடப்பு இருபது - 20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரை அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் இணைந்து நடத்துகின்றன.

இதன் லீக் மற்றும் சூப்பர்-8 சுற்றுகள் முடிந்து அரையிறுதியாட்டங்கள் நாளை ஆரம்பிக்கின்றன.

சூப்பர் - 8 சுற்றின், குழு - 1 இல் முதல் இரு இடங்களைப் பிடித்தி இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகளும் குழு - 2இலிருந்து தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறின.

முதல்அரையிறுதிப்போட்டிஇலங்கை நேரப்படி நாளை காலை 6 மணிக்கு தருபா பிரையன் லாரா மைதானத்தில் ஆரம்பிக்கின்றது.

இதில் சூப்பர் - 8 சுற்றின் குழு - 2இல் முதலிடம் பிடித்த தென்னாபிரிக்காவும் குழு - 1இல் இரண்டாம் இடம்பிடித்திருந்த ஆப்கானிஸ்தான் அணியும் மோதுகின்றன.

மார்க்ரம் தலைமையிலான தென்னாபிரிக்க அணி நடப்பு இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில், தான் ஆடிய 7 போட்டிகளிலும் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்துள்ளது.

அந்த அணியின் துடுப்பாட்டத்தில் டி கொக், டேவிட் மில்லர், கிளாசென், டிரிஸ்டன் ஸ்டப்ஸ் ஆகியோர் தமது சிறப்பான ஆட்டத்தைக் காட்டியுள்ளனர்.

பந்துவீச்சில் அன்ரிச் நார்ஜே, ரபாடா, கேசவ் மகராஜ், ஷம்சி ஆகியோரும் தரமான நிலையில் உள்ளனர்.

அதேவேளை, உலகக் கிண்ண வரலாற்றில் இதுவரை அரையிறுதி வரையே முன்னேறியுள்ள தென்னாபிரிக்கா, இந்த முறை இறுதிப்போட்டிக்குச் சென்று சாதித்துக் காட்டவேண்டும் என்ற எழுச்சியுடன் உள்ளது.

இதேபோல், ஆப்கானிஸ்தான் அணி இந்த முறை வலுவான அணிகளை வீழ்த்தி முதல் முறையாக அரையிறுதிக்கு முன்னேறி அசத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் அணி லீக் சுற்றில் உகாண்டா, நியூஸிலாந்து, பப்புவா நியூ கினியா அணிகளையும், சூப்பர் - 8 சுற்றில் அவுஸ்திரேலியா, பங்காளதேஷ் அணிகளையும் வீழ்த்தியுள்ளது.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரை துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கி வருகின்றது.

துடுப்பாட்டத்தில் ரஹ்மானுல்லா குர்பாஸ், இப்ராஹிம் சட்ரான் ஆகியோர் நம்பிக்கை நட்சத்திரங்களாக உள்ளனர்.

பந்துவீச்சில் பசல்ஹக் பரூக்கி, அணித்தலைவர் ரஷித்கான், நவீன் உல் ஹக் ஆகியோர் சிறப்பான நிலையில் உள்ளனர்.

எனவே இம்முறை ஆப்கானிஸ்தான் அணி தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரு அணிகளும் முதல் முறையாக இறுதிப்போட்டிக்கு நுழைய கடுமையாகப் போராடும் என்பதால் ஆட்டத்தில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

கனடா முரசு

பக்கங்கள் 06

புதன்கிழமை 26/06/2024

## பணவீக்கம் மே மாதத்தில் 2.9 வீதமாக அதிகரிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 26

கனடாவின் வருடாந்த பண வீக்கம் மே மாதத்தில் 2.9 சத வீதமாக அதிகரித்துள்ளது.

கனடிய புள்ளிவிவரத் திணைக் களம் நேற்றுத்

C2



# லெபனானில் இருந்து கனடியர்களை வெளியேறக் கோருகிறது கனடா அரசு

**ஒன்ராரியோ, ஜுன் 26**

**லெபனானில் தங்கியுள்ள கனடியர்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு கனடிய அரசாங்கம் கோரியுள்ளது.**

**வன்முறை அதிகரித்து வரும் நிலையில் லெபனானில் உள்ள கனடியர்களை உடனடியாக வெளியேறுமாறு வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜோலி வலியுறுத்தியுள்ளார்.**

அதிகரித்து வரும் வன்முறை காரணமாக பாதுகாப்பு நிலைமை மேலும் மோசமடைய கூடும் என மெலானி ஜோலி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனானுக்கு பயணிப்பதற்கான நேரம் இதுவல்ல என அமைச்சர் ஜோலி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுத மோதல்கள் தீவிரமடைந்தால், அது கனடியர்கள் நாட்டை விட்டு வெளியேறும் திறனையும், தூதரக சேவைகளை வழங்கும் கனடாவின் திறனையும் பாதிக்கும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# முன்னாள் துணை பொலிஸ் பிரதானி மீது பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டு!

ஒன்ராரியோ, ஜூன் 26

ஒட்டாவா நகரின் முன்னாள் துணை பொலிஸ் பிரதானி மீது பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

ஒட்டாவா பொலிஸ் நிலையத்தின் முன்னாள் துணைத் பிரதானி உதய் ஜஸ்வால் மீதே பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவரது தலைமையில் பணியாற்றிய ஒரு பெண் பொலிஸ் அதிகாரி தொடர்பாக இந்த குற்றச்சாட்டு பதிவாகியுள்ளது.

பணியிடத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக கூறப்படுகிறது.

பல மாதங்கள் நீடித்த விசாரணையைத் தொடர்ந்து ஒன்ராரியோ சிறப்புப் புலனாய்வு பிரிவு நேற்று செவ்வாய்க் கிழமை இந்தக் குற்றச்சாட்டை பதிவு செய்துள்ளது.

இந்த குற்றச்சாட்டு 2011இல் நடந்த ஒரு சம்பவத்துடன் தொடர்புடையது எனக் கூறப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகளை உதய் ஜஸ்வாலின் சட்டத்தரணி முற்றாக மறுத்துள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை என கூறும் சட்டத்தரணி, இந்தக் குற்றச்சாட்டு பொய்யானது என நீதிமன்றத்தில் வாதாடத் தயாராக உள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.





# பழங்குடியினரின் உரிமைகளைப் பேண நவீன ஒப்பந்தங்கள் இன்றியமையாதவை

## அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஜூன் 26

பழங்குடியினரின் உரிமைகள் மற்றும் சுயநிர்ணயத்தை முன்னேற்றுவதற்கு நவீன ஒப்பந்தங்கள் இன்றியமையாதவை என பழங்குடியினர் உறவுகளுக்கான அமைச்சர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் கிட்செ லாஸ் மற்றும் கிட்சும்கால் பழங்குடியினரால் கனடிய அரசாங்கத்துடன் இரண்டு நவீன உடன்படிக்கைகள் நேற்று கைச்சாத்திடப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட போதே, இந்த உடன்படிக்கைகள் வரலாற்று மைல்கற்கள் என அமைச்சர் ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளார்.

‘கிட்செலாஸ் உடன்படிக்கை நில உரிமை, நிர்வாகம் மற்றும் வள முகாமைத்துவம் என்பவற்றை செயல்படுத்துகிறது, பல தசாப்த கால பேச்சுவார்த்தை விடயங்களை நிறைவேற்றுகிறது. அத்தோடு அது பிரகாசமான எதிர்காலத்திற்கும் வழி வகுக்கும்’ என அவர் தெரிவித்துள்ளார்.

‘30 ஆண்டுகால அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியை பிரதிநிதித்துவப்படுத்தும், கிட்சும்காலும் உடன்படிக்கை அவர்களின் ஆட்சி மற்றும் வளங்களுக்கான உரிமைகளை அங்கீகரிக்கும்’ என அமைச்சர் கூறியுள்ளார்.







## பணவீக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது அறிக்கையில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

சேவைகளுக்கான விலை அதிகரிப்பால் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சேவைகளுக்கான விலைகள் ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்ததை விட 4.6 சதவீதம் உயர்ந்துள்ளதாக புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த கால கட்டத்தில் பொருள்களின் விலை ஒரு சதவீதம் உயர்ந்தது.

கடந்த வருடத்தை விட மே மாதத்தில் மளிகைப் பொருள்களின் விலை 1.5 சதவீதம் அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மளிகைப் பொருள்களின் விலை 1.4 சதவீதம் அதிகரித்து, ஏப்ரல் மாதத்திற்கான வருடாந்த பணவீக்கம் 2.7 சதவீதமாக பதிவாகியிருந்தது.

கனடாவின் பணவீக்க நிலைமைகள் சாதகமான நகர்வினை நோக்கி பயணிப்பதாக மத்திய வங்கியின் ஆணையாளர் ரிப் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

கனடிய மத்திய வங்கி நாட்டின் பணவீக்க வீதத்தை இரண்டு விதத்திற்கும் குறைந்த அளவில் பேணும் இலக்கினை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் தமது இலக்கினை எட்டக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு ஆண்டுகள் காலப் பகுதியில் முதல் தடவையாக இந்த மாத ஆரம்பத்தில் கனடிய மத்திய வங்கி, அதன் வட்டி விகிதத்தை கால் சதவீதம் குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடிய நிதிக் கொள்கையில் ஏற்பட்ட பாரிய நிதி மாற்றமாக இது கருதப்படுகிறது.

எவ்வாறெனினும் வேலையற்றோர் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வாக்காளர்களின் கரிசனைகள், விரக்தியை கவனத்தில் கொள்கிறாராம் பிரதமர் ட்ரூடோ

## இடைத்தேர்தல் தோல்வி குறித்து அவர் கருத்து

ஒன்ராரியோ, ஜூன் 26

வாக்காளர்களின் 'கரிசனைகள் மற்றும் விரக்தியை' தாம் செவிமடுக்கின்றார் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

டொரன்டோவின், சென் போல்ஸ் தொகுதியில் இடம்பெற்ற இடைத்தேர்தலில் ஆளும் லிபரல் கட்சி வேட்பாளர் லெஸ்லி சேர்ச் தோல்வியுற்றார்.

சுமார் 32 வருடங்களாக லிபரல் கட்சியினரின் கோட்டையாக இருந்த இந்தத் தொகுதியை கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளர் டொன் ஸ்டுவர்ட் 590 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்த தோல்வி தொடர்பில் கருத்து தெரிவித்த போதே, பிரதமர் ட்ரூடோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த வருத்தம் ட்ரூடோ மற்றும் அவரது லிபரல் கட்சியின் அரசியல் வாய்ப்புகள் பற்றிய கேள்விகளை எழுப்பியுள்ளதுடன், கனடா முழுவதும் அவர்களது வாக்கு வங்கி குறைந்து



வருவதன் எதிரொலியாக உள்ளது.

'இது எளிதான நேரம் அல்ல, மேலும் கனடியர்கள் காணக்கூடிய மற்றும் உணரக்கூடிய உறுதியான, உண்மையான முன்னேற்றத்தை வழங்க நானும் எனது முழு லிபரல் குழுவும் இன்னும் நிறைய வேலைகளைச் செய்ய வேண்டும் என்பது தெளிவாகிறது' என்று பிரிட்டிஷ் கொலம்பியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ட்ரூடோ குறிப்பிட்டுள்ளார்.

'இந்த கடினமான காலங்களில் மக்கள் பெற வேண்டியதை உறுதி செய்ய வேலை செய்வதையும் போராடுவதையும் நாங்கள் ஒருபோதும் நிறுத்த மாட்டோம். எனது கவனம் உங்கள் வெற்றியில் உள்ளது, அது அங்கேயே இருக்கும்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்யப் பிரதமர் திட்டமிட்டுள்ளார் என்ற ஊகங்களுக்கு நீர் ஊற்றுவதாக இந்த அறிக்கை தோன்றியுள்ளது.

இதேவேளை, டொராண்டோவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த துணைப் பிரதமர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட், பிரதமருக்கு தனது ஆதரவை வெளிப்படுத்திய மையுடன், கட்சியை அடுத்த தேர்தலில் கொண்டு செல்லும் திறன் பிரதமருக்கு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.




# பழங்குடியினரின் சட்டமன்றத்தின் கூட்டத்தில் கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பொய்லியேவ்

ஒன்ராரியோ, ஜூன் 26

கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் பியர் பொய்லியேவ், தலைமைப் பொறுப்பை ஏற்ற பிறகு முதல்முறையாக வரவிருக்கும் பழங்குடியினரின் சட்டமன்றத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

அடுத்த மாதம் மொன்ரியலில் நடைபெறும் சட்டசபை கூட்டத்தில் கலந்து கொண்டு, அவர் முக்கிய உரை நிகழ்த்துவார் எனக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் செபாஸ்டியன் ஸ்காம்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

பொய்லியேவின் நல்லிணக்க வாக்குறுதிகள் குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ள பழங்குடியினர் தலைவர்களுடன் ஒரு கேள்வி-பதில் அமர்வில் அவர் பங்கேற்கவுள்ளார் எனவும் ஸ்காம்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பிரதமர் என்ற வகையில், பழங்குடியினரின் பொருளாதார வளர்ச்சி ஈட்டும் நடவடிக்கைகளில் இருந்து தாம் விலகி இருப்பார் எனப் பழங்குடியினரின் தலைவர்களை சந்தித்த போது பொய்லியேவ் கூறியிருந்தார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக்மீத் சிங் ஆகியோர் கடந்த காலங்களில் இந்த சட்டமன்ற கூட்டங்களில் பங்கெடுத்திருந்தனர்.

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் சிங்கும் இந்த ஆண்டு கூட்டத்தில் கலந்து கொள்வார் கட்சியின் செய்திப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது.

# ஒன்ராரியோவில் வாகனக் கடத்தல்களை விசாரிக்கும் மாகாண பணிக்குழுவின் செயற்பாட்டில் முன்னேற்றம்

## இதுவரை திருடப்பட்ட 177 வாகனங்கள் மீட்பு; 124 பேர் கைது

ஒன்ராரியோ, ஜூன் 26

ஒன்ராரியோவில் வாகனக் கடத்தல்களை விசாரிக்கும் மாகாண பணிக்குழு, 10 மில்லியன் டொலர்களுக்கு அதிகமான மதிப்புள்ள திருடப்பட்ட வாகனங்களை மீட்டுள்ளது.

ஏழு மாத காலம் தொடர்ந்த விசாரணையின் பின்னர் இந்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசாரணையின் பலனாக 124 பேர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், திருடப்பட்ட 177 வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் மொத்தம் 749 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன எனவும், எட்டுத் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனவும் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தப் பணிக்குழு தெரிவித்துள்ளது.







# குழந்தைகள் நல சீர்திருத்தங்கள் குறித்து பழங்குடியினர் சபையுடன் உடன்படிக்கை



ஒன்ராரியோ, ஜூன் 26

கனடிய வரலாற்றின் மைல்கல் தீர்வின் ஒரு பகுதியாக வாக்குறுதியளிக்கப்பட்ட 20 பில்லியன் டொலர்களுக்கு மேல் இருக்கும் குழந்தைகள் நல சீர்திருத்தங்கள் குறித்த ஒப்பந்தத்தை ஒட்டாவாவுடன் இறுதி செய்யவுள்ளதாக பழங்குடியினர் சபையின் தேசிய தலைவர் கூறியுள்ளார்.

ஆனால், ஜோர்டானின் கொள்கை என்ற சட்ட விதியின் சீர்திருத்தங்கள் இதில் சேர்க்கப்படாது எனவும், இது பழங்குடியினர், குழந்தைகளுக்குத் தேவைப்படும்போது அவர்களுக்குத் தேவையான கவனிப்பைப் பெறுவதை உறுதிசெய்வதை நோக்கமாகக் கொண்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதை ஒரு 'நினைவுச்சூழல் ஒப்பந்தம்' என சிண்டி வூட்ஹவுஸ் நேபினாக் அழைக்கிறார்.

மேலும் இந்த ஆண்டின் பிற்பகுதியில் அதை அங்கீகரிக்கும் முன் தலைவர்களுடன் தொடர்ந்து பணியாற்றுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

'நேரம் எங்கள் நண்பன் அல்ல. ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான காலத்தில் (கூட்டாட்சி) தேர்தல் உள்ளது' என்று நேற்று நடைபெற்ற நேர்காணல் ஒன்றில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சசகெச்சுவான், பிரிட்டிஷ் கொலம்பியா மற்றும் கியூபெக் - லாப்ரடோரில் உள்ள பழங்குடியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள், இறுதி தீர்வு ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளில் அமைப்பு வெளிப்படையாக இல்லை என்று விமர்சித்துள்ளனர்.

# கனடா தினப் பேரணி மொன்ரியலில் ரத்து!

கியூபெக், ஜூன் 26

மொன்ரியல் நகரின் கனடா தினப் பேரணி இரத்து செய்யப்பட்டுள்ளது.

கனடா தினப் பேரணிக்கு அனுமதி பெறுவதிலும், நிதி பெறுவதிலும், அரசாங்க அதிகாரிகளிடமிருந்து ஒப்புதல் பெறுவதிலும் சிரமத்தை எதிர்கொள்ளும் நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

1970களின் பிற்பகுதியில் இருந்து மொன்ரியல் நகரில் கனடா தினப் பேரணி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தொற்று காரணமாக 2020 முதல் 2022 வரை பேரணி இரத்து செய்யப்பட்டிருந்தது.



மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காக நாடளாவிய ரீதியில் வேறு பல நகரங்களிலும் கடந்த சில ஆண்டுகளாகக் கனடா தினப் பேரணி இரத்து செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# விளையாட்டு திடல் அருகில் சூடு; 20 வயது இளைஞர் ஒருவர் சாவு!

கனடாவின் டொரன்டோவில் உள்ள விளையாட்டு திடல் அருகே நடந்த துப்பாக்கி சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டொரன்டோவில் ஜேன் வீதி மற்றும் பால்ஸ்டாஃப் அவென்யூ பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்திற்கு அருகில் துப்பாக்கி சூடு சம்பவம் நடைபெற்று இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திங்கட்கிழமை இரவு நடந்த இந்த துப்பாக்கிச் சூட்டில் 20 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்திருக்கின்றமை தற்போது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

டொரன்டோவில் காவல்துறையின் தகவல் படி, நள்ளிரவுக்கு சற்று முன்னதாக இரவு 11:58 மணி அளவில் துப்பாக்கி சூடு நடைபெற்றதாக அவசரகால சேவைகளுக்குத் தகவல் கிடைத்தது.



இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் துப்பாக்கி காயங்களால் பாதிக்கப்பட்ட மனிதர் ஒருவரை சம்பவ இடத்தில் கண்டனர்.

உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அவர் கொண்டு செல்லப்பட்ட போதிலும், அவர் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந் தார்.

இந்நிலையில் இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சந்தேகத்திற்குரிய 4 பேரை பொலிஸார் தீவிரமாக தேடி வருகின்றனர் எனக் காவல்துறை அதிகாரி தகவல் தெரிவித்துள்ளார்.

# வறிய குடும்பங்களுக்கான நலன்புரித் திட்ட உதவி பிரிட்டிஷ் கொலம்பியாவில் கணிசமாக அதிகரிப்பு!

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் வறிய குடும்பங்களுக்கான நலன்புரி திட்ட உதவிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நன்மையடைய உள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் முதல்வர் டேவிட் எபி இது தொடர்பில் அறிவித்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவும் நோக்கில் மாகாண அரசாங்கம் இந்த நலன் புரித் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

கடந்த ஆண்டிலும் இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் 18 வயதிற்கும் குறைந்த பிள்ளைகளை உடைய குடும்பங்களுக்கு மாகாண அரசாங்கம் இந்த குடும்ப நலன் திட்டத்தை வழங்குகின்றது.



சர்வதேச பணவீக்க வீதம், வட்டி வீத மாற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்ற காரணிகளினால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

மாகாண அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய நலன்புரி தொகையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 3 லட்சத்து 40 ஆயிரம் குடும்பங்கள் இந்த நலன்புரி திட்டத்தின் மூலம் நன்மை அடைய உள்ளன.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் 66 ஆயிரம் குடும்பங்கள் மேலதிகமாக நன்மை பெற்றுக் கொள்ள உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சராசரியாக குடும்பம் ஒன்று சுமார் 2,000 டொலர்களைப் பெற்றுக் கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேறிய வருமானம் மற்றும் பிள்ளைகளின் எண்ணிக்கை போன்ற காரணிகளின் அடிப்படையில் இந்த கொடுப்பனவுத் தொகை தீர்மானிக்கப்படுகின்றது.

ஒற்றைப் பெற்றோரை உடைய குடும்பங்களுக்கு கூடுதல் தொகை வழங்கப்படுகின்றது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் சுமார் 70 வீதமான குடும்பங்கள் இந்த நலன்புரி திட்டத்தின் மூலம் இந்த ஆண்டில் நன்மை அடைய உள்ளன என அரசாங்கம் அறிவித்துள்ளது.



# கனடாவில் குடியுரிமை மீறல் குற்றச்சாட்டில் பிரிட்டிஷ் ஆர்வலர் டொமி ராபின்சன் கைது

வலதுசாரித் தீவிரப் போக்குடைய பிரிட்டிஷ் ஆர்வலர் ஸ்டீபன் யாக்ஸ்லி லெனான் நேற்று திங்கட்கிழமை கனடாவில் கைது செய்யப்பட்டார்.

அவரது கடவுச்சீட்டு கனடிய அதிகாரிகளினால் முடக்கப்பட்டுள்ளது.

கல்கரியில் ஒரு நிகழ்வில் அவர் உரையாற்றிய பின்னர் கனடாவில் குடியுரிமை மீறல் குற்றச்சாட்டின் பேரில் பிரிட்டிஷ் ஆர்வலர் டொமி ராபின்சன் என அழைக்கப்படும் ஸ்டீபன் யாக்ஸ்லி லெனான் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

இணையத்தில் வெளியான காணொலிகளில் அவர் சீருடைகள் அணியாமக் வந்த காவல்துறையினரால் கைவிலங்கிட்டுக் கைது செய்யப்பட்டு இருப்பது காட்டப்பட்டுள்ளது.

டாமி ராபின்சன் கைது பிறகு விடுவிக்கப்பட்டாலும், கனடாவில் தங்கியிருக்கவும், அவரது கடவுச்சீட்டை ஒப்படைக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனால் நாடு முழுவதும் திட்டமிடப்பட்ட பாட்காஸ்ட்(podcast) நிகழ்வுகளுக்கான சுற்றுப் பயணத்தைத் தம்மால் தொடர முடியாமல் போனதாக டாமி ராபின்சன் தெரிவித்துள்ளார்.

41 வயதான ராபின்சன், 'ரெபெல் நியூஸ்' என்ற வலதுசாரி ஊடக நிறுவனத்தால் கனடாவின் மூன்று நகரங்களில் பேச அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# வெறுப்புக் குற்றச் சம்பவங்கள் கனடாவில் அதிகரித்துள்ளன

ஒன்ராரியோ, ஜூன் 26

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடம் வெறுப்புக் குற்றச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடத்தின் இதே காலத்துடன் ஒப்பிடுகையில், வெறுப்புணர்வை தூண்டும் வகையில் நடந்த சம்பவங்களின் எண்ணிக்கை 55 சதவீதம் அதிகரித்துள்ளது என டொரன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாளாந்தம் தாம் ஐந்து வெறுப்புக் குற்ற விசாரணைகளை முன்னெடுக்கின்றனர் என டொரன்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு இதுவரை நடந்ததாக கூறப்படும் 221 வெறுப்புக் குற்றங்களில் 45 சதவிகிதமானவை யூத எதிர்ப்பு சம்பந்தப்பட்டவையாகும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

இது ஏனைய அனைத்து வெறுப்புக் குற்றங்களை விட அதிகமானது என டொரன்டோ பொலிஸார் சுட்டிக் காட்டுகின்றனர்.



பொலிஸார் மீதான அவநம்பிக்கை காரணமாக பெரும்பாலான வெறுப்புக் குற்றங்கள் பதிவு செய்யப்படுவதில்லை எனவும் செயற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.